**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI</u>**

**CC No.26/2021 Date:29-04-2024**

**<u>அ.சா.1 – செந்தில்குமார், த/பெ.கிருஷ்ணசாமி,</u>**

**(சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை).**

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்).**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

1) வழக்கின் எதிரிகள் எனது பங்காளி உறவுமுறை என்றால் சரிதான். எனக்கும், எதிரிகளுக்கும் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சொத்தின் மூல பத்திரம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனக்கு எதிராக எதிரிகள் புகார் கொடுத்து 3-4 வழக்குகள் இதே நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தன என்றால் சரிதான். தற்சமயம், பிரச்சனைக்குரிய அந்த மூலப்பத்திரம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், எதிரிகளின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2.5 கி.மீ தூரம் இருக்கும்.

2) சம்பவ நாளன்று மாலை 05.00 மணிக்கு எனது அண்ணன், 2ம் எதிரியிடம் சென்று பத்திரத்தை கேட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2ம் எதிரி தான் போன் செய்து பத்திரத்தை வாங்கி செல்லுமாறு சொல்லியதாக எனது அண்ணன் மூலம் தெரிந்து கொண்டு நானும் அவருடன் சென்றேன். நானும், எனது அண்ணனும் 2ம் எதிரியிடம் சென்று பத்திரத்தை கேட்டதற்கு முன்னதாக எனது அண்ணன் சென்று பத்திரத்தை கேட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் சம்பவத்திற்கு பின்னிட்டு தெரிந்துகொண்டேன். நானும், எனது அண்ணனும் 2ம் எதிரியிடம் சென்று பத்திரத்தை கேட்டதற்கு முன்னதாக எனது அண்ணன் பத்திரத்தை வாங்குவதற்காக சென்று அங்கு வாய்தகராறு ஆகி பின்னர் தான் என்னிடம் வந்து பத்திரத்தை கொடுக்கவில்லை என்று சொன்னார் என்றால் சரியல்ல.

3) அவ்வாறு சொன்னபோது நான் மிகுந்த மதுபோதையில் இருந்தேன் என்றும், அதை கேட்டு நான் மட்டும் தனியாக சென்று தான் எதிரிகளிடம் பத்திரத்தை கேட்டு தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. பிரச்சனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தான் எதிரிகளின் வீட்டிற்கு மிளகாய் பொடியுடன் சென்றேன் என்றால் சரியல்ல. நான் தான் எதிரிகளின் வீட்டிற்கு சென்று சுத்தியால் அடித்தும், உயிர்நாடியை காலால் மிதித்து காயப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

4) நான் மிகுந்த மதுபோதையில் எனது ஆடைகளை கழற்றி இருசக்கர வாகனத்தில் வைத்து விட்டு உள்ளாடையுடன் நின்றுகொண்டு எதிரிகளுடன் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அழைத்து தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்பதற்கான

Call history ஐ நான் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரிகள் என்னை அழைத்திருந்தால் நான் போலிசாரிடம் Call history ஐ கொடுத்திருப்பேன் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, புகார் வாக்குமூலத்தை வாங்கி சென்றபிறகு போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை.

5) சம்பவத்தின்போது நான் மதுபோதையில் 1ம் எதிரியை அடித்து காயப்படுத்தி நானே கீழே கிடந்த EB கம்பத்தில் தடுக்கி அருகில் இருந்த பள்ளி சுவரின்மீது விழுந்து காயத்தை தானாக ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. போலிசாரிடம் என்னை தாக்க பயன்படுத்திய ஆயுதங்களை ஒப்படைத்தேனா என்றால் அவர்கள் என்னை கேட்கவே இல்லை. குற்ற எண்.494/2020 என்ற வழக்கை எதிரிகள் எனக்கு எதிராகவும், அ.சா.2 மற்றும் அவரது மகனுக்கு எதிராகவும் தாக்கல் செய்து நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆனால் வழக்கு தவறான பொருண்மையில் பதிவு செய்யப்பட்டது என முடித்து வைக்கப்பட்டுவிட்டது.

6) சம்பவத்தில் அ.சா.2க்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், எதிரிகள் அவரை தாக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். என்னை தாக்க பயன்படுத்திய ஆயுதங்களை போலிசாரிடம் ஆஜர்படுத்தாமல் இருந்ததற்கு எந்த காரணமும் இல்லை என்றால் சரிதான், நான் மருத்துவமனையில் இருந்தேன். உண்மையாகவே, எதிரிகள் என்னை தாக்கியிருந்தால் ஆயுதங்களை போலிசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றும், நானே ஏற்படுத்திகொண்ட காயத்தை எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

7) நான் கீழே விழுந்தது தெரிந்து தான் 2ம் எதிரி சம்பவ இடத்திற்கு வந்தார் என்றும், அ.சா.2ம் சம்பவ இடத்தில் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, அ.சா.2 ஐ மற்றவர்கள் பிடித்துகொள்ள என்னை அடித்தவுடன் தான் அவரை விட்டார்கள். நான் மேற்படி சங்கதிகளை முதன்முதலில் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றும், புகாரில் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness (Sd)-Senthilkumar

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**CC No.26/2021 Date:29-04-2024**

அ.சா.2 – பாலு, த/பெ.கிருஷ்ணசாமி,

**(சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை).**

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்).**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

1) சம்பவ இடத்திற்கு 15 நிமிடம் கழித்து நான் சென்றேனா என்றால் இல்லை, நானும், அ.சா.1 ம் சேர்ந்து தான் சம்பவ இடத்திற்கு சென்றோம். நாங்கள் இருவரும் ஒரே வாகனத்தில் சென்றோமா என்றால் ஒரே வாகனத்தில் தான் சென்றோம். சம்பவத்தில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு 1 மணி நேரத்திற்கு முன்னர் பத்திரம் சம்பந்தமாக பொதுநபர்களை வைத்து எதிரிகளிடம் பேசினேனா என்றால் இல்லை. பத்திரத்தை கொடுப்பதாக யார் எனக்கு தகவல் சொன்னார் என்றால் 1 ம் எதிரி எனக்கு தகவல் சொன்னார். 1 ம் எதிரி பத்திரத்தை கொடுப்பதாக தான் நான் அ.சா.1 டம் சொல்லி நாங்கள் இருவரும் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் சரிதான்.

2) 1 ம் எதிரி எனக்கு போன் செய்து பத்திரத்தை வாங்கி செல்ல சொன்னதற்கான ஆவணத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த Call history ஐ நான் போலிசாரிடம்கொடுக்காததற்கு காரணம் ஏதும் இல்லை என்றால் சரிதான். 1 ம் எதிரி பத்திரத்தை தருவதாக சொல்லவில்லை என்றும், நான் தான் 2 ம் எதிரியிடம் பத்திரம் தொடர்பாக பிரச்சனை செய்து பின்னர் பொதுநபர்கள் தகராறு வேண்டாம் என விலக்கிவிட்டனர் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டுதான், நான் மதுபோதையில் இருந்த அ.சா.1 டம் பத்திரம் தரவில்லை என அவரை மேலும் கோபப்பட வைத்து அ.சா.1 பத்திரம் கேட்க எதிரிகளிடம் அனுப்பினேன் என்றால் சரியல்ல.

3) சம்பவத்தின்போது அ.சா.1 மதுபோதையில் 1 ம் எதிரியை அடித்து காயப்படுத்தி கீழே கிடந்த EB கம்பத்தில் தடுக்கி அருகில் இருந்த பள்ளி சுவரின்மீது விழுந்து தானாக காயத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. அ.சா.1 கீழே விழுந்தது தெரிந்து தான் 2 ம் எதிரி சம்பவ இடத்திற்கு வந்தார் என்றும், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அதனால் தான் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றும், நான் சம்பவத்தை மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness (Sd)-Balu

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.